Retired Medical Officers

* 66 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Assistant Surgeons Association has requested the Government in October 1971 to give up the practice of employing superannuated men as Heads of Family Planning, Health Services and Medical Education Department; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(ஆ) மருத்துவத் துறையிலுள்ள குறிப்பிட்ட சிறப்பியல் பிரிவில் தகுதியுள்ள மருத்துவர்கள் குறைவாக இருந்தாலோ அல்லது குறிப்பிட்ட தனித்திறமையுள்ளவராக இருந்தாலோ தான், ஓய்வுக்குப்பின் சில அதிகாரிகள் பணியில் நீடிக்க வைத்துக்கொள்ளப்படுகின்றார்கள் என்பதை சங்கத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, will the Government consider the utilisation of the services of retired men without affecting the promotional avenues of younger men?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது 55 வயதில் எல்லோரும் பதவியில் இருந்து ஓய்வுபெறவேண்டுமென்ற பொது விதி ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது. நிர்வாகத்தில் அமைந்து அந்த நிர்வாகத்திற்கு டாக்டர்கள் பலர் ஆர்வத்தோடு முன்வருவதில்லை என்ற காரணத்தினால், நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டும் என்கிற கருத்தில் தகுதி உடையவர் அந்தப் பதவிக்கு வரும் வரை தேவையானால் மீண்டும் பரிசீலனைக்கு உட்பட்டு பதவியில் உள்ளவர் ஓராண்டு காலத்திற்கு அதுவும் 58 வயது வரைதான் புது நியமனம் என்ற முறையில் அனுமதிக்கப்படுகிறார். இதன் காரணத்தினால் சர்வீசில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பு பாதிக்கப்படுகிறது என்று எந்தவகையிலும் கருத முடியாது.

திரு. ஆ. கு. சுப்பையா : திறமையானவர்கள் என்ற காரணத்திற்காக ஓய்வு பெற்ற பிறகு எத்தனை பேர்களுக்கு வேலை நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக அவ்வாறு அளிக்கப்படுவதில்லை. ஒன்றிரண்டு பதவிகளுக்குத்தான் இன்றியமையாத் தன்மையைக் கருத்தில் கொண்டு பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறவர்களின் தகுதி, திறமையைக் கருதி புது நியமனம் என்ற முறையில் அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தமாதிரி நிபுணர்களை புது நியமனம் செய்வதற்கு என்ன பிரத்யேகமான வழி முறைகள் கையாளப்படுகின்றன, விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அறியலாமா ?

1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சில பதவிகளில் அமர்வதற்கு இத்தனை ஆண்டு அனுபவம் இருக்கவேண்டும், இன்ன போஸ்ட் க்ராஜ்வேட் கோர்ஸ் பாஸ் செய்திருக்கவேண்டும் என்று இருக்கிறபோது இந்தத்தகுதி உடையவர் கிடைப்பது இல்லை. சில சமயம் மேல்நாடுகளுக்கு இந்தத் தகுதி பெற்றுவரச் சென்றிருக்கலாம். அவர் வரும்வரை—இந்தத் தகுதி உடையவர் கிடைக்கும்வரை—ஒன்றிரண்டு வருடம்—ஒவ்வொரு ஆண்டாகத்தான் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறவர்—அவரது தனிச் சிறப்பு—தகுதி காரணமாக—பதவி நீட்டிப்பு மறு நியமனம் என்ற அடிப்படையில் தரப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : முக்கியமான பதவி என்கிறபோது டைரெக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸ், டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் ஆகிய இரண்டுதான் இருக்கிறது. டைரெக்டர் ஆப் ஹெல்த் சர்வீசுக்கு நியமிக்கப்படவில்லை என்று அறிகிறேன். டைரெக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் என்பது வைத்தியம் புரிகிற பதவி அல்ல. நிர்வாகத்தை நடத்துகிறபதவி—யார் யார் எங்கு இருக்கவேண்டும் என்பதாக தீர்மானிக்கிற நிலையில் எல்லோருடைய தகுதியும்—ஒவ்வொரு இடத்தின் தனிச் சிறப்பும் நன்கு தெரிந்த ஒருவர் அந்தப் பதவியில் இருந்தால் தான் Medical education is a specialised educational subject என்பதனால், அப்படிப்பட்ட தகுதி உடையவர் ஒருவர் கூட இல்லை என்று சொன்னால் அரசாங்கம் மட்டும் எந்த நல்ல காரியத்தையும் சாதிக்க முடியாது. அதன் காரணத்தினால் தான் அந்தப் பதவியில் உள்ளவர் ஓராண்டுக்கு புது நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இது அரசின் கொள்கைப்படி கூட தவறு இல்லை.

Government Hospital near Tambaram

* 67 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open a Government Hospital near Tambaram; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தாம்பரம் அருகில் 100 படுக்கைகளுடன் கூடிய ஒரு புதிய அரசு மருத்துவமனை 27—7—1971 முதல் நடைபெற்று வருகிறது.